DEPOSITION OF WITNESS

CHAPTER CODE OF CIVIL PROCEDURE

IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE (FTC), THENI.

# MCOP. No.179/2021

Deposition of Witness : PW1

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திருமதி.நாகஜோதி | ஜாதி | : | -- |
| கணவர் பெயர் | : | ராஜ்குமார் | தொழில் | : | |
| கிராமம் | : | | சமயம் | : | -- |
| தாலுகா /மாவட்டம் | : | | வயது | : | /2025 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 24.01.2025

**(சாட்சி ஆதார் அடையாள அட்டை மூலம் அடையாளம் காணப்பட்டார்).**
**சாட்சி அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டார்.**

**எ.ம.த.கு.வி.:**

கேள்வி : விபத்து சம்மந்தமாக போலீஸில் புகார் கொடுத்தது யார்?

பதில் : நான் தான். ஆனால் நான் விபத்தை நேரடியாக பார்க்கவில்லை. மகாபிரபு மற்றும் கோபி என்பவர்கள் என்னிடம் தகவல் சொன்னார்கள்.

கேள்வி : அந்த இருவரையும் இந்த மனுவில் சாட்சியாக விசாரிக்க தயாராக இருக்கிறீர்களா?

பதில் : ஆம்.

கேள்வி : உங்கள் கணவர் ஓட்டிச் சென்ற வாகனத்தின் உரிமையாளர் யார்?

பதில் : என் கணவர் தான்.

கேள்வி : விபத்து சமயத்தில் உங்கள் கணவர் ஓட்டிச் சென்ற வாகனத்திற்கு காப்பீடும், உங்கள் கணவருக்கு ஓட்டுநர் உரிமமும் இல்லை என்று சொன்னால்?

பதில் : சரியல்ல.

கேள்வி : இந்த வழக்கில் உங்கள் கணவருக்கான ஓட்டுநர் உரிமத்தை தாக்கல் செய்ய தயாராக இருக்கிறீர்களா?

பதில் : ஆம்.

கேள்வி : உங்கள் கணவரை மருத்துவமனையில் அனுமதித்ததற்கான விபத்து பதிவேடு நகல் மற்றும் சம்பவ மாதிரி வரைபடத்தை தாக்கல் செய்ய முடியுமா என்றால்?

பதில் : முடியும்.

கேள்வி : விபத்து நடந்த இடத்தை பார்த்தீர்களா?

பதில் : ஆம்.

கேள்வி : விபத்து நடந்த ரோட்டில் உள்ள ஆவின் பாலகத்திற்கு அருகே தான் விபத்து நடந்தது என்றால்?

பதில் : சரிதான்.

கேள்வி : அந்த ஆட்டோ ஓட்டுநர் பக்கத்தில் இருந்த ஆவின் பாலகத்தில் டீ குடித்து கொண்டிருக்கும் போது உங்கள் கணவர் மது போதையில் அதிவேகமாகவும், கவனக் குறைவாகவும் வாகனத்தை ஓட்டி வந்து நின்றிருந்த ஆட்டோ மீது மோதி விபத்து ஏற்படுத்தி விட்டார் என்றால்?

பதில் : சரியல்ல.

கேள்வி : மனு விபத்திற்கான காரணம் உங்கள் கணவரின் கவனக் குறைவு தான் காரணம் என்றால்?

பதில் : சரியல்ல.

கேள்வி : ஆகையால் இந்த மனு 2–ம் எதிர் மனுதாரரை பொறுத்து தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்று சொன்னால்?

பதில் : சரியல்ல.

கேள்வி : உங்கள் கணவர் ஓட்டிச் சென்ற இருசக்கர வாகனத்தின் காப்பீடு நிறுவனத்தை இந்த வழக்கில் சேர்க்காதது இந்த வழக்கை பாதித்துள்ளது என்றால்?

பதில் : சரியல்ல.

கேள்வி : உங்கள் கணவர் பெயிண்ட் வேலை மற்றும் தோட்ட வேலை சம்மந்தமாக வருமானம் வந்ததற்கான சான்றாவணம் எதுவும் தாக்கல் செய்துள்ளேன் என்றால்?

பதில் : சரியல்ல.

கேள்வி : உங்கள் கணவர் முறை சாரா தொழிலாளர் நல வாரிய சங்க அடையாள அட்டையை இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால்?

பதில் : சரிதான்.

கேள்வி : ம.த.சா.ஆ.15 ஏலக்காய் தோட்ட சான்றாவணம் பதிவு செய்யப்படாத ஆவணம் என்றாலும் அது இந்த வழக்கிற்காக உற்பத்தி செய்யப்பட்டது என்றால்?

பதில் : சரியல்ல.

கேள்வி : உங்கள் மாமியார் சொத்து சம்மந்தமாக உரிமை ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால்?

பதில் : சரிதான்.

கேள்வி : பல்வேறு தலைப்புகளில் நீங்கள் கேட்டு இருக்க கூடிய இழப்பீடுகள் அதிகம் என்றாலும் அது உங்களுக்கு கிடைக்க கூடியது அல்ல என்பதால் இந்த மனு தள்ளுபடி செய்ய தக்கது என்றால்?

பதில் : சரியல்ல.

கேள்வி : விபத்தை தொடர்புடையதாக சொல்லும் ஆட்டோ நின்று கொண்டிருந்ததால் இந்த மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால்?

பதில் : சரியல்ல.

மறு விசாரணை: இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல சுருக்கெழுத்தரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு, சாட்சியால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் இன்று 24.01.2025 அன்று வெள்ளிக்கிழமை சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

GOPINATHAN S

Digitally signed by GOPINATHAN S
Date: 2025.01.24 15:28:27 +0530

கூடுதல் மாவட்ட நீதிபதி. தேனி.
24.01.2025.